**மருத்துவக்கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை -10 அவர்களின் செயல்முறை ஆணை**

**முன்னிலை: மரு.ரா.நாராயணபாபு, எம்.டி., டி.சி.எச்.,**

E24

ந.க.எண்:78778/நி2/4/2020 8252 நாள்: 07.09.2022

பொருள் : நிர்வாகம் – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.மு.கேசவன் த/பெ. திரு.பெ.முத்துசாமி, இளநிலை உதவியாளர், அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவனை, கோயமுத்தூர் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் – பணிவரன்முறை – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

ESI HOSPITAL 29 SEP 2022 COIMBATORE-641 015.

பார்வை :

1. அரசாணை (நிலை)எண்:560, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:03.08.1977 மற்றும் அதன் தொடர்புடைய அரசாணைகள்.
2. அரசாணை (நிலை)எண்:120, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:26.06.1995.
3. அரசாணை (நிலை)எண்:42, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:12.03.2007.
4. அரசாணை (நிலை)எண்:202, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:08.10.2007.
5. அரசாணை (நிலை)எண்:18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:23.01.2020.
6. அரசாணை (நிலை)எண்:48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:26.02.2020.
7. அரசு கடித எண்:8775/ஏடி2/2020-1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2)துறை, நாள்:16.03.2020.
8. இவ்வியக்கக பணி ஒதுக்கீட்டு ஆணை ந.க.எண்:18465/நி2/4/2018, நாள்:15.05.2018.
9. முதல்வர், அரசு மோகன் குமரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, சேலம் அவர்களின் பணியமர்த்தல் ஆணை ந.க.எண்:7783/நி5/2015, நாள்:22.04.2016.
10. முதல்வர், அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, கோயமுத்தூர் அவர்களின் கடித ந.க.எண்:5804/நி4/2019, நாள்:23.12.2020 மற்றும் 10.02.2021.

*****

திரு. ம. கேசவன்
திரு. ரூ. உதவியாளர்

ஆணை:

கோயமுத்தூர் அரசு மருத்துவக்கல்லூரியில் அலுவலக உதவியாளராகப் (Office Assistant) பணிபுரிந்து கொண்டிருந்த திரு.பெ.முத்துசாமி அவர்கள் 08.07.2002 அன்று பிற்பகல் மருத்துவ இயலாமை காரணமாக பணியில் இருந்து ஓய்வு பெற்றார். அவரின் பிறந்த தேதி 07.09.1951 ஆகும். அவர் மருத்துவ இயலாமை காரணமாக ஓய்வு பெறும் நாளில் அவரின் வயது 51 ஆண்டுகள் ஆகும். அவரின் உத்தேச ஓய்வு பெறும் நாள் 30.09.2011 ஆகும். இவர் அலுவலக உதவியாளர் பணியிடத்தில் தகுதிகாண் பருவம் முடித்தவர் ஆவார். மேற்படி அரசு ஊழியர் மருத்துவ இயலாமை காரணமாக பணி ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, அவரின் மகன் திரு.மு.கேசவன் அவர்கள் தனது 10.12.2003 நாளிட்ட கடிதத்தில் தனக்கு கருணை அடிப்படையில் பணி கோரி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்தார்.

2) மனுதாரர் திரு.மு.கேசவன் அவர்களின் பிறந்த தேதி 26.05.1982 ஆகும். தனியர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்திருந்தால், பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016)-ன்படி, தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக ரூ.19500 – 71900/- நிலை-8 (Level-8) என்ற சம்பள முறையில் பணிநியமனம் செய்யப்பட்டு, சேலம், அரசு மோகன் குமரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், 25.04.2016 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் இணைந்துள்ளார். பின்னர் பணியிட மாறுதல் மூலம் 03.01.2018 முதல் கோயமுத்தூர், அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறார்.

3) எனவே, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.மு.கேசவன் என்பவரின் தற்காலிக பணியினை, பார்வை 6 மற்றும் 7-ல் காணும் அரசாணைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 25.04.2016 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து செயல்முறை ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுவதன் மூலம் தனியருக்கு முதலாண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றை பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

ரா.நாராயணபாபு
மருத்துவக் கல்வி இயக்குநர்

பெறுநர்

1. திரு.மு.கேசவன் ,
இளநிலை உதவியார்,
அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி
மருத்துவமனை, கோயமுத்தூர்.

– உரிய வழியாக.

2. முதல்வர், அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, கோயமுத்தூர்.

3. மாநில கணக்காயர், சென்னை –600 018.

4. மாவட்ட கருவூல அலுவலர், கோயமுத்தூர்.

நகல்:

இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை, சென்னை-06.

உதிரி / இருப்பு கோப்பு.

// உண்மை நகல் / அனுப்பப்படுகிறது //

மேலாளர்

ந.க.எண். 5804/ந்4/2019

முதல்வர் அலுவலகம்
தொ.அ.ஈ.மருத்துவமனை கோவை-15.
நாள் 12.10.2022

அனுப்பப்படுகிறது.

பெறுநர்
திரு. மு. கேசவன்
கிராமநில உதவியாளர்
தொ.அ.ஈ.மருத்துவமனை கோவை-15
– உரிய அலுவலர்

ADMINISTRATIVE OFFICER
ESI HOSPITAL,
COIMBATORE - 15.
18/10/2022